# ஸ்ரீ ஷிர்டி ஸாயி பாபா

## துவாரகாமாயி அருள்வாக்கு

### ஸ்ரீ ஸாயி ஸத்ய விரத பூஜை



கருவி

**"பாபா மாமா"**

உதவி

ஸாயி அலமேலு

ஸாயி மல்லேஸ்வரி

**ஸ்ரீ சாயிபிரச்சார் பரிவார்**

11/11, 6வது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்

சென்னை - 600 024. போன்: 044 - 6544 9766

செல்: + 91 98408 18595, 90032 60610

E-maild: ssppbabamama@gmail.com

Web: www.srisaipracharpariwar.org.

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 2006 |
| இரண்டாம் பதிப்பு | : | 2007 |
| மூன்றாம் பதிப்பு | : | 2008 |
| நான்காம் பதிப்பு | : | 2009 |
| ஐந்தாம் பதிப்பு: | : | 2010 |
| ஆறாம் பதிப்பு | : | 2011 |
| ஏழாம் பதிப்பு | : | 2012 |


Rights Reserved to
SRI SAI PRACHAR PARIWAR

# ஸ்ரீ ஸாயி பாபாவின் பதினோரு உபதேச மொழிகள்

## (தினசரி பாராயணத்திற்கு உகந்தது)

1. ஷீரடி ஸ்தலத்தை எவன் மிதிக்கிறானோ அவனுடைய துன்பங்கள் முடிவடைந்து செளகரியத்தை அடைகிறான்.
2. துவாரகா மாயியை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.
3. இவ்வுலகை விட்ட பிறகும் நான் ஸர்வ சக்தியுடன் வேலை செய்வேன்.
4. என் மசூதி என் பக்தர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும் புத்திமதிகளையும் கொடுக்கும்.
5. என்னுடைய பூத உடல் என் மசூதியிலிருந்து பேசும்.
6. என்னுடைய மசூதியிலிருந்து கொண்டே நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் தீவிரமாகவும் இருப்பேன்.
7. என்னிடம் வருபவர்களுக்கும் என்னைத் தஞ்சமாக அடைபவர்களுக்கும் என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்பொழுதும் உயிருடன் இருக்கிறேன்.
8. நீ என்னை அடைந்தால் நான் உன்னை கடாஷிக்கிறேன்.
9. நீ என் பேரில் உன் பளுவை சுமத்தினால் நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.
10. நீ உபதேசத்திற்காகவும் உதவிக்காகவும் என்னை அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.
11. என்னுடைய பக்தர்கள் வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது.

# என்னுரை

கலியுகத்தின் கண்கண்ட கடவுள், சீர்மிகு சீரடி தட்சிணாமூர்த்தி ஸ்ரீஸாயி நாதரின் அருமை, அருந்தவப் பெருமை மகத்துவம் நிறைந்த மகிமை ஆகியவற்றை சாயி பக்தர்கள் முழுமையாக உணர்ந்தும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறார்கள். இருந்த போதிலும் யாம் பெற்ற இன்பம் இந்த வையகம் பெற வேண்டும் என்ற இனிய வேட்கை தான் இந்த நூலுக்கு ஆதாரம்.

இந்த பூவுலகில் பேசும் தெய்வமாக, கஷ்டங்களைப் போக்கும் துரித நிவாரண மூர்த்தியாக, ஏழை பங்காளராக, தன் சத்திய நெறியை போதித்து தன் பக்தர்களை அறவழியில் நடத்திச் செல்லும் அருட் கடவுளாக, இன, மத, சாதி, சமய பேதமற்ற தன் பக்தர்களைக் கொண்டு புதிய சமுதாயத்தைப் படைக்கும் உலகக் கடவுளாக பாபா போற்றப்படுவதில் வியப்பேதுமில்லையே.

என் 41 ஆண்டுகால தீவிர சாயி பக்தியில் என்னையும் என்னை சார்ந்த பலரையும் பாபா கனவிலும் நனவிலும் அருளாட்சி புரிந்து சுபிட்சப் பாதையை காட்டியுள்ளார். இது எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்பதுபாபாவின் கட்டளை.

''எந்த ஒரு சிறிய என் நிழற்படத்திலும் நான் நிஜமாக இருக்கிறேன்'' என்றார் பாபா.

திரு. உளச்சீட்டின் மூலம் என் ஆசியை நீங்கள் தெரிந்து கொள்ளலாம் என்றும் பாபா தன் சரிதத்தின் வாயிலாக சொல்லியிருக் கிறார். இவ்வரிய நூல் பல ஆண்டுகாலமாக அனுபவ பூர்வமாக பாபாவின் வார்த்தைகளை வெளிப்படுத்தி சில குடும்பங்களுக்கு மட்டும் வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்கிறது.

''என் பக்தர்கள் ஜோசியர்களை நாடுவதை நான் அனுமதிப்ப தில்லை. என் வார்த்தைகளே அவர்களுக்கு வேதவாக்கு'' என்ற பாபாவின் அருள்வாக்கு உலகத் தமிழர்களை சென்றடைந்து, அவர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வாழ்க்கையில் வளம் சேர்க்க எல்லாம் வல்ல ஸ்ரீ ஸாயி நாதரின் பாதங்களைத் தொட்டு வணங்கி இந்தப் புத்தகத்தை காணிக்கையாக்குகிறோம்.

இந்தப் புத்தகத்தை வெளியிட்டே ஆக வேண்டும். பாபா தன் பக்தர்களுடன் இந்தப் புத்தகத்தின் வாயிலாக அனுதினமும் பேசி வழிகாட்ட வேண்டும் என்ற அடங்காத ஆவலுடன் முழு மூச்சாய்த் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திருமதி ஸாயி மல்லேஸ்வரிக்கு ஸாயி பக்தர்களின் நன்றி என்றென்றும் இருக்கும்.

அடுத்ததாக என் சரிபாதியாக என்னுடன் சாயி பக்தியில் இயங்கும் என் மனைவி திருமதி. சாயி அலமேலுவிற்கு சாயி பக்தர்கள் சார்பில் நன்றி.

-''பாபா மாமா''

## கையாளும் முறை

1. பயபக்தியுடன் உங்கள் வீட்டில் உள்ள பாபா படத்தின் முன் உட்கார வேண்டும்.
2. ஸாயி நாமஸ்மரனை செய்ய வேண்டும்.
3. பின் மனதில் உங்களை வாட்டும் பிரச்சனை பற்றியோ அல்லது வேறு வேலை, சுப காரியங்கள் பற்றியோ நினைத்துக் கொண்டு பாபாவின் பாதங்களில் இரண்டு ரூபாய் தஷிணை வைத்துவிட்டு அவரை மனமுருக வேண்ட வேண்டும்.
4. பின்னர் கண்களை மூடி ஸாயி ஸ்மரனை செய்தபடியே ஏதாவது ஒரு பக்கத்தைத் திறந்து (குரு விரலால்) ஆள்காட்டி விரலால் மேலிருந்து கீழாக இடப்பக்கமோ வலப்பக்கமோ ஏதாவது ஒரு இடத்தைத் தொட வேண்டும்.
5. பிறகு கண் விழித்து அந்த எண்ணுக்குண்டான பலனை பாபா சொல்வதாக பாவித்து வாசித்து அதன்படி நடக்க வேண்டும்.
6. மீண்டும் நாமஸ்மரனை சொல்லி நன்றி தெரிவிக்க வேண்டும்.
7. தஷிணைகளை பின்னர் பாபா ஆலய சேவைகளுக்கு சேர்த்து விட வேண்டும்.

## மற்றொரு முறை

பாபாவுக்கு ஒரு தட்டில் டைமண்ட் கல்கண்டு அல்லது கோதுமை ஒரு கைப்பிடியோ அதற்கு மேலோ வைத்து தஷிணை வைத்து நைவேத்தியம் செய்து அதிலிருந்து நிறைய எடுத்து எண்ணிப் பார்த்து பலனறிந்து கொள்ளலாம்.

## ஸாயிநாத மகாத்மியம்

அகிலாண்டகோடி பிரும்மாண்ட நாயக ராஜாதி ராஜ யோகிராஜ பரப்பிரும்ம ஸச்சிதானந்த ஸமர்த்தஸத்குரு ஸ்ரீசாயி நாத் மகராஜ் மஹா சமாதி அடைந்து 94 ஆண்டுகள் ஆகின்றது. அவருடைய அவதார நாட்களில் அவர் சொன்னதைப் போல ஷிர்டி இன்று ஒரு திவ்ய க்ஷேத்திரமாகி பக்தர்களை புற்றினை நோக்கிச் செல்லும் எறும்புகளைப் போல, சாரை சாரையாக மக்கள் கூட்டம் ஷிர்டியை

நோக்கி வந்த வண்ணம் இருக்கிறது. இந்த விஞ்ஞான யுகத்தில் மெய்ஞானம் தேடி ஷிர்டியை நாடுவோர் கோடி கோடி மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் அந்த குக் கிராமத்தை முழுமையாக வியாபித்திருக்கிறது. அதற்கு என்ன காரணம். துரித நிவாரண மூர்த்தியாக பாபா இருப்பதே காரணம் உங்கள் தெய்வமாக, குருவாக, தாயாக உங்களோடு ஒன்றாக பாபா இருப்பதே காரணம். தன் பதினோரு உபதேச மொழிகளில் ஒன்று ''எவன் ஒருவன் ஷிர்டி மண்ணை மதிக்கிறானோ அவன் சகல துன்பங்களிலுமிருந்து விடுபடுகிறான்'' என்பது. தானே ஷிர்டியில் தன் முதல்பாதம் பதித்து ஷிர்டி கிராமத்தை திவ்ய க்ஷேத்திரம் ஆக்கினார். அன்று முதல் தன் மஹா சமாதி வரை அவர் ஷிர்டியை விட்டு, யார் அழைத்த போதிலும் அகன்றதில்லை. அவர் யார், எந்த ஊர், என்ன பெயர் என்பதை யாவரும் அறியார்.

ஷிர்டி கிராமத்தை தேர்ந்தெடுத்து ஒரு வேப்பமரத்தடியில் சாயி தஷிணாமூர்த்தி நிஷ்டையில் பல நாட்கள் ஆழ்ந்தார். அவரிடம் ஒரு அபூர்வ சக்தி இருப்பதை கிராம மக்கள் உணரத் தொடங்கினர். திடீரென்று பாபா ஒருநாள் மாயமானார். அவரைப்பிரிந்து கிராம மக்கள் மிகவும் துயருற்றனர்.

மூன்றாண்டுகள் கழித்து மீண்டும் ஒரு திருமண கோஷ்டியுடன் பாபா வந்திறங்க ''ஆவோ ஸாயி'' என்று அன்புடன் அவரை பக்த மஹால் சாபதி வரவேற்றார். அன்று முதல் பாபா ஸாயி பாபா ஆனார்.

பெயரோ பக்தன் இட்டது, உறவோ ஊர் மக்கள். இரவில் பிஷை எடுத்து உண்ணும் பிச்சாண்டியாக, பக்கிரியாக பாபா தன் அவதார நாட்களை ஷிர்டியில் துவக்கினார் சாதாரண ஷிர்டி கிராமம் அன்று முதல் திவ்யமஹா க்ஷேத்திரமானது.

அவர் தங்குவதற்கு ஊர் மக்கள் கொடுத்த இடமோ ஒரு பாழடைந்த மசூதி. அதற்கு அவர் இட்ட பெயரோ ''துவாரகாமாயி'' ஸ்ரீ கிருஷ்ணரின் மறு அவதாரமானவர் பாபா என்பதற்கு இதுவே சான்றானது.

தினமும் மாலை வேளைகளில் துவாரகாமாயியை சுற்றிலும் விளக்குகள் ஏற்றி வைப்பது பாபாவின் வழக்கம். ஒரு நாள் யாரும் எண்ணெய் தரவில்லை எப்படி விளக்கேற்றுவார் பாபா என்று இறுமாந்திருந்தனர்.

வெறும் நீரை அகல்களிலூற்றி விளக்கேற்றினார் பாபா– தண்ணீர் விளக்குகள் ''தக தக'' வென எரிந்தன.

அனைவரும் அவரை முழு மனதோடு நம்பி வணங்க ஆரம்பித்தனர்.

அவர் ஆணைக்கு பஞ்சபூதங்கள் கட்டுப்பட்டது.

மழை நின்றது.

புயல் நின்றது.

ஷிர்டியை வாட்டிய காலரா காணாமல் போனது பாபாவின் பக்தர்களுக்கு என்ன தேவையோ அதை அவர் ஷிரடிரிடியில் இருந்தபடியே தந்திருக்கிறார். அவருடைய அதிசயங்கள் பலருக்கு நன்கு தெரிந்திருந்தாலும் என் மனதில் நீங்காமல் என்றென்றும் என்னை வியக்க வைக்கும் அதிசய சம்பவம் ஒன்று பாபா மஹால் சாபதியின் மடி மீது தலை வைத்து, ''நான் சிறிது நேரம் லேசாக சஞ்சாரம் செய்து விட்டு வருகிறேன் அது வரை என் அவதார உடலை நீ பார்த்துக் கொள்'' என்று சொல்லிவிட்டு, மஹால் சபாதி மடிமீது தன் உடலை கிடத்தி விட்டு அகன்று விட்டார். அவர் மாய்ந்ததாகக் கருதி அவரை எதிர்ப்பவர்கள் அவருக்கு கிரியை செய்யச் சொல்லி வற்புறுத்தினர். மருத்துவர்களும் பாபா உயிர் அகன்று விட்டது என்று கூறி விட்டனர். கிராம வழக்கப்படி உடனே காரியங்கள் நடைபெற வேண்டும் என்று கிராம அதிகாரிகளும் கூறிவிட்டனர். ஆனால் மஹால் சாபதியோ எதற்கும் சளைக்கவில்லை பாபா மீண்டும் வருவார் உயிர் பெற்றெழுவார் என்று சாயி நாமம் ஜெபித்தபடியே இருந்தார்மற்ற பக்தர்களும் நாம ஜெபம் செய்த வண்ணம் இருந்தனர்.

ஒன்றல்ல இரண்டல்ல எழுபத்தியிரண்டு மணி நேரம், அதாவது மூன்று நாட்கள் கழித்த பிறகு பாபா மீண்டும் உயிர்த்தெழுந்தார். பக்தர்கள் பரவசமடைந்தனர்.

இந்த அற்புதம் தெய்வங்களால் மட்டுமே நிகழ்த்த சாத்தியப்படும் அற்புதம். ஏசுவுக்கு நிகழ்ந்த அற்புதம் அவருடைய இறுதி நாட்களில். ஆனால் பாபா நிகழ்த்திக் காட்டிய இந்த அற்புதம் அவருடைய அவதார நாட்களுக்கு நடுவில்; இந்த அற்புதத்திற்கு பிறகு பாபாவின் பெருமை வெகுவாகப் பேசப்பட்டது.

## ஸ்ரீஷிர்டி ஸாயி ஸத்ய விரத பூஜா கல்பம்

பாபாவின் கூற்றுப்படி பாபா இன்னமும், என்றும் ஜீவனோடு இருக்கிறார். உலகம் உள்ள அளவும் அவர் வாழ்ந்து நம் மனித இனத்திற்கு வழிகாட்டிக் கொண்டே இருப்பார்.

ஸ்ரீஷிர்டி ஸாயிபாபாவின் பரிபூரண அருள் எல்லா பக்த கோடிகளுக்கும் முழுமையாகவும், தாராளமாகவும் கிடைக்கிறது.

ஆனால் வெகு சிலருக்கு அவருடைய அருள் சற்று தாமதமாகக் கிடைக்கிறது. இதற்குக் காரணம் அந்த பக்தர்களுடைய கர்மவினைகளும், முன் ஜன்ம பாவங்களும் தான் பாபாவின் கருணை மழையைத் தடுத்து அந்த பக்தர்களுக்கு பாபா கடாட்ஷம் கிடைக்கச் செய்யாமல் போகும் அந்த கர்ம வினைகளை தவிடு பொடியாக்க வல்லது இந்த ஸ்ரீஷிர்டி ஸாயி பாபா ஸத்ய விரத பூஜா கல்பம்.

தீவிர க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்டு பின்னர் பாபாவின் அருள் கடாட்ஷத்தால் முழு குணமடைந்த பாபாவின் பரமபக்தர் மும்பையை சேர்ந்த பீமாஜி பாட்டீல் கர்மவினைகள் காரணமாக தனக்கு வந்த தீராத ரோகம் பாபா கடாட்ஷத்தால் தீர்க்கப்பட்டதை நன்குணர்ந்த பீமாஜி பாபாவிற்கு மிகுந்த நன்றிக் கடன்பட்டார். கர்மவினைகளைப் போக்கும் பாபா பக்தி மற்ற பக்தர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று ஆவல் மிகக் கொண்டார்.

சத்ய நாராயணா பூஜையைப் போல ஸாயி ஸத்யவிரதம் என்ற பூஜா முறையை ஏற்படுத்த பீமாஜி ஆசைப்பட்டார். அதற்காக பாபாவைப் பற்றி கீர்த்தனைகள் உபன்யாசங்கள் செய்யும் பாபா ஆசி பெற்ற தாஸ்கனு மஹராஜ் என்ற பாபா பக்தரை நாடினார். அவரும் சந்தோஷப்பட்டு அதற்கான கதைகளை தந்து ஊக்குவித்தார்.

இதன் பயனாக 1909ம் ஆண்டு ஸ்ரீ ஷிர்டி ஸாயி ஸத்ய விரதம் ஆரம்பமானது. அது முதல் லட்சக்கணக்கான பாபா பக்தர்கள் இந்த அரிய விரத பூஜையை மேற்கொண்டு தன் கர்மவினைகளைப் போக்கி பாபாவின் பூரண கடாட்சத்தை பெற்று சிறப்புற்றனர்.

இந்த விரத பூஜையை உங்கள் பிறந்த நாளன்றும், சத்சரித பாராயண துவக்க நாளன்றும், பாராயணம் முடியும் நாளிலும், வியாழக்கிழமை தோறும், பௌர்ணமி அன்றும் ஏகாதசிதோறும், விஜயதசமியன்றும் உங்கள் விருப்பம் நிறைவேறக் கருதியும் செய்யலாம்.

பக்தகோடிகள் இவ்வரிய பூஜா விரதத்தை கடைபிடித்து பாபாவின் அருளை பெற எல்லாம் வல்ல ஸ்ரீசாயி நாத் மகராஜை சாஷ்டாங்க நமஸ்காரமிட்டு வேண்டிக் கொள்கிறேன்.

## பூஜைக்குத் தேவையான பொருள்கள்

1. ஸ்ரீஷிர்டி ஸாயிபாபா விக்ரகம் அல்லது படம்.
2. மஞ்சள் குங்குமம், வெற்றிலை பாக்கு, பூ, பஞ்சாமிர்தம், கற்பூரம், சந்தனம் மற்றும் பூஜா திரவியங்கள் (ஜவ்வாது)
3. ஒரு தாம்பாளம், சொம்பு, பஞ்சபாத்திர உத்தரணி.

4. தேங்காய் - 5, ரவாலட்டு 10, அச்சு வெல்லம் -2, பால்கோவா, வெண்ணெய், மகாநைவேத்தியம் (சர்க்கரை பொங்கல், அல்லது கேசரி)
5. நவதானியங்கள் (தனித்தனியாக)
6. பூஜை முடிந்து சாயிபாபா கோயிலில் ஸ்ரத்தா சபூரியைக் குறிக்க இரண்டு ரூபாய் தக்ஷிணை சேர்க்க வேண்டும். பாபாவை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து முடிக்க வேண்டும்.

## ஸ்ரீ ஷிர்டி ஸாயி சத்ய விரதம் பிரார்த்தனை

**பிரும்மானந்தம் பரமசுகதம்**
**கேவலம் ஞான மூர்த்திம்**
**த்வந்தாதீதம் ககன சதுர்சம்**
**தத்வமஸ்யாதி லக்ஷ்யம்**
**ஏகம் நித்யம் விமல மசலம்**
**சர்வதி சாக்ஷி பூதம்**
**ஸ்ரீஸாயி நாதம் த்ரிகுணரஹிதம்**
**சத்குரும் தம் நமாமி.**

## பாபா மூலமந்திரம்

**நமஸ்தே ஸாயி நாதாய**
**மோஹ தந்த்ர வினாசினே**
**குரவே புத்தி போதாய**
**போத மாத்ரஸ்வரூபினே**
**ஸ்ரீ குருப்யோ நம**

## விநாயகர் பூஜை

**சுக்லாம் பரதரம் விஷ்ணும்**
**சசிவர்ணம் சதுர்புஜம்**
**பிரசன்ன வதனம் த்யாயேத்**
**ஸர்வ விக்னோப ஸாந்தயே**

(மஞ்சள் பிள்ளையாரைப் பிடித்து மஹா கணபதியை ஆவாஹனம் செய்ய வேண்டும்)

ஓம் பூ, ஓம் புவ; ஓம் ஸுவ; ஓம் மஹ; ஓம் ஜன; ஓம் தப; ஓம் சத்யம், ஓம் தத்ஸ விதுர் வரேண்யம், பர்க்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத், ஓமாபோ, ஜ்யோதீரஸ, அம்ருதம் ப்ரஹ்ம, பூர்ப்புவஸ்ஸுவரோம் ததேவ லக்னம் ஸுதிதம் ததேவ தாரா பலம் சந்த்ரபலம் ததேவ, வித்யா பலம் தெய்வ பலம் ததேவ லக்ஷ்மீபதே அங்க்ரியுகம் ஸ்மராமி.

**மமோபார்த்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம், கரிஷ்யமானஸ்ய கர்மண: அவிக்நேந பரிஸமாபத்யர்த்ம், ஆதௌ மஹா கணபதி பூஜாம் கரிஷ்யே.**

(என்று சங்கல்பம் செய்து, மஞ்சளால் செய்த விக்நேஸ்வரரை வைத்து)

**ஓம் கணா நாம் த்வா கணபதிகும் ஹவாமஹே**
**கவிம் கவீ நாம் உபமஸ்ரவஸ்தமம்**
**ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத**
**ஆந: ஸ்ருண்வந் ஊதிபி: ஸீதஸாதநம்**
**அஸ்மிந் ஹரித் ராபிம்பே ஸுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி.**
**(மனதால் தியானிக்கவும்)**
**ஆவாஹயாமி (அக்ஷதை, புஷ்பம் சேர்க்கவும்)**
**ஆஸநம் ஸமர்ப்பயாமி**
**பாத்யம் ஸமர்ப்பயாமி(உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**அர்க்கயம் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**ஆசமநீயம் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**ஸ்நாநம் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**ஸ்நாநர் நந்தரம் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**வஸ்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (உத்தரிணியால் தீர்த்தத்தை விடவும்)**
**கந்தாந்தாராயாமி (சந்தனம் தெளிக்கவும்)**
**ஹரித்ரா சூர்ணம் ஸமர்ப்பயாமி (குங்குமம் பூசவும்)**
**அக்ஷதான் ஸமர்ப்பியாமி (அக்ஷதை)**
**புஷ்பாணி ஸமர்ப்பயாமி (புஷ்பம்)**

## புஷ்பத்தால் அர்ச்சனை

**ஓம் ஸுமுகாய நம:**
**ஓம் ஏகதந்தாய நம:**
**ஓம் கபிலாய நம:**
**ஓம் கஜகர்ணாய நம:**
**ஓம் லம்போதராய நம:**
**ஓம் விகடாய நம:**
**ஓம் விக்ந ராஜாய நம:**
**ஓம் கணாதிபாய நம:**
**ஓம் தூமகேதவே நம:**
**ஓம் கணாத்யக்ஷாய நம:**
**ஓம் பாலச்சந்த்ராய நம:**
**ஓம் கஜானனாய நம:**
**ஓம் வக்ரதுண்டாய நம:**
**ஓம் ஸுர்ப்பகர்ணாய நம:**
**ஓம் ஹேரம்பாய நம:**
**ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:**

ஓம் மஹா கணபதயே நம: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி, தூபதீபார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (அஷதை சேர்க்கவும்)

நைவேத்யம் (வாழைப்பழங்களை வைத்து) ஓம் பூர்ப்புவஸுஃ:
ஸத்யம் த்வாதேந பரிஷிஞ்சாமி, அம்ருதோ பஸ்த்ரணபஸி (என்று உத்தருணி ஜலத்தால் பரிசேக்ஷணம் செய்யவும்) ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபாநாய ஸ்வாஹா, ஓம் வ்யா நாயஸ்வாஹா, ஓம் உதாநாயஸ்வாஹா, ஓம் ஸ மா நாயஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மனே ஸ்வாஹா, மஹா கணபதயே நம: கதலீ பலம் நிவேதயாமி என்று நிவேதநம் செய்யவேண்டும். நைவேத்யாநந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. (உத்தரிணியால் ஜலம் விடவும்) தாம்பூலம் ஸமர்ப்பயாமி. ஸர்வோபசாராந் ஸமர்ப்பயாமி (அக்ஷதை சேர்க்கவும்)
பிறகு கைகளை கூப்பிக் கொண்டு
வக்ர துண்ட மஹாகாய கோடீஸுர்ய ஸமப்ரப
அவிக் நம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா என்று பிரார்த்தனை செய்யவும். பிரதிக்ஷண நமஸ்காரம் செய்யவும்
கணபதி ப்ரஸாதம் ஸிரஸா க்ருஹ்ணாமி (என்று சொல்லி, அர்ச்சனை செய்த பிரஸாதத்தை சிரஸில் தரித்துக் கொள்ள வேணும்)

## ஸங்கல்பம்

ஸுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸந்த வதநம் தியாயேத் ஸர்வ விக் நோப ஸாந்தயே.
மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வரப்ரீத் யர்த்தம், ஸுபேஸோப நேமுஹுர்த்தே ஆத்யப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே, ஸ்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டாவிம்ஸதிதமே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூத்வீபே, பாரத வர்ஷே, பரத கண்டே, மேரோ, தக்ஷிணே பார்ஸ்வே, ஸகாப்தே, அஸ்மிந்வர்த்தமாநே, வ்யால ஹாரிகேப்ரபவாதி ஷஷ்டிஸம் வத்ஸராளும்
மத்யே - நாமஸம்வத்ஸ்ரே - அயநே,
ருதென - மாஸே - பக்ஷே - ஸுபநக்ஷ்த்ர ஸுபயோக ஸுபகரண ஏவங்குண விசேஷண விஸிஸ்டாயாம் ஸுபதிதௌ மம (அஸ்ய யஜமா நஸ்ய) ஸ ககுமபஸ்ய க்ஷேமஸ்ரிய வீர்ய, விஜய,
ஆயுக்ஏரோக்யைஸ் வர்யாணாம், அமிவ்ருத்தயர்த்தம், ராஜாத்வாரே ஸர்வாநுகூல்ய ஸியர்த்ம் நவக்ரஹ பூஜாம், ஸ்ரீ சாயி சத்யவிரத பூஜாம் கரிஷ்யே, ததங்கம் கலச பூஜாம்ச கரிஷ்யே
(கோடிட்ட இடத்தை தக்கபடி சொல்லிக் கொள்ளவும்)

## கலச பூஜை

சந்தனம், புஷ்பம், மாவிலை முதலியவைகளால் அலங்கரித்த கலசத்தை வலது கையால் மூடிக் கொண்டு, கலஸஸ்ய முகே விஷ்ணு கண்டே ருத்ர: ஸமாஸ்ரித:

**மூலேதத்ரஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ரு கணா: ம்ருததா:**
**குக்ஷௌது ஸாரா: ஸர்வே ஸப்த்தவீபா வஸுந்தரா**
**ரிக் வேதோ யஜுர்வேத: ஸாம வேதோ தர்வண:**
**அங்கைஸ்ச யஹிதா: ஸர்வே கலஸாம்பு ஸமாஸ்ரிதா:**
**ஆயாந்து தேவ பூஜார்த்த துரிதக்ஷய காரகா:**
**கங்கேச யமுநே சைவ கோதாவரி ஸரஸ்வதி**
**நர்மதே ஸிந்து காவேரி தீர்த்ஸேமிந் ஸந்நிதம் குரு**
**(என்று சொல்லி, அந்த கலச தீர்த்தத்தால் பூஜாத் திரவியங்களையும் தன்னையும் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும்.)**

## நவக்ரஹ பூஜை

1. புதன் (பச்சைப்பயிறு)
   அஸ்மின் மண்டலே அதிதேவதா ப்ரத்யதி தேவதாஸஹிதம், புதக்ரஹம்த்யாயாமி, ஆவாஹ யாமி.
2. சுக்ரன் (மொச்சை)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ஸுக்ர
   க்ரஹம் த்யாயாமி, ஆவா ஹயாமி.
3. சந்திரன் (நெல்)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ஸோமக்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.
4. குரு (கடலை)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ப்ருஹஸ்பதி க்ரஹம் த்யாயாமி, ஆவா ஹயாமி.
5. சூரியன் (கோதுமை)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ஆதித்யக்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.
6. அங்காரகன் (துவரை)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் அங்காரக்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.
7. கேது (கொள்)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் கேது
   க்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.
8. சனி (எள்)
   அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ஸநைஸ்சரக்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.

9. ராகு (உளுந்து)
அஸ்மின் மண்டலே அதி தேவதா ப்ரத்யதி தேவதா ஸஹிதம் ராஹுக்ரஹம் த்யாயாமி, ஆவாஹயாமி.

**ஆதித்யாதி நவக்ரஹதேவதாப்யோ நம: ஆஸ நம் சமர்ப்பயாமி, பாத்யம் ஸமர்ப்பயாமி, ஆசமநீயம் ஸமர்ப்பயாமி: வஸ்த் ரார்த்தம் சமர்ப்பயாமி, யஜ்ஜோபவீர்த்தம், உத்தரீயார்த்தம், ஆபரணார்த்தம் - ச - அக்ஷதாந் ஸமர்ப்பயாமி, கந்தாந்தாரயாமி, அக்ஷதாந் சமர்ப்பயாமி.**

## புஷ்பங்களால் அர்ச்சனை

**ஓம் ஆதித்யாய நம: ஓம் அங்காரகாய நம: ஓம் ஸுக்ராய நம:**
**ஓம் ஸோமாய நம: ஓம் புதாய நம: ஓம் ப்ருஹஸ்பதயே நம:**
**ஓம் ஸ நைஸ்சராய நம: ஓம் ராஹவே நம: ஓம் கேதவே நம:**
**நாநாவித பரிமள பத்ரபுஷ்பாணி ஸமர்ப்பயாமி, ஆதித்யாதி, நவக்ரஹ தேவ தாப்யோ நம: தூபமாக்ராபயாமி, தீபம் தர்ஸயாமி, மஹாநைவேத்யம் நிவேதயாமி, தாம்பூலம் சமர்ப்பயாமி, கர்ப்பூர நீராஜ நம் தர்ஸயாமி, அநந்த கோடி ப்ரதஷிண நமஸ்காராந் ஸமர்ப்பயாமி, ஆதித்யாதி நவக்ரஹ தேவதாப்யோ நம: யதா ஸ்தாநம் ப்ரதிஷ்டாபயாமி (என்று அக்ஷதை சேர்க்கவும்).**
**ஆதித்யாதி நவக்ரஹ தேவதாப்ரஸாத ஸித்தி ரஸ்து!**

## ஸ்ரீ ஷிர்டி சாயி ஸத்யவிரத பூஜை
## தியானம்

**அதம் ஸ்ரீஷீர்டி ஸாயி ஸத்ய விரத ஆரம்பம்**
**ஓம் கேசவாய ஸ்வாஹா, ஓம் நாராயணாய ஸ்வாஹா, ஓம் மாதவராய ஸ்வாஹா, கோவிந்தா, விஷ்ணு, மதுசூதனா, திரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, ரிஷிகேசா, பத்மநாபா, தாமோதரா, சங்கர்ஷணா, வாசுதேவா, ப்ரஜ்யும்னா, அனுருத்தா, புருஷோத்தமா, அதோக்ஷஜா, நரசிம்மா, அச்சுதா, ஜனார்த்தனா, உபேந்திரா, ஸ்ரீ கிருஷ்ணாய நம:**

## பூ - சுத்தி

**உத்திஷ்டந்து, பூத, பிசாச எதே பூமி பாரக எதேஷ மவிரோதேன ப்ரம்ம - கர்ம சமாரயே**
**ஸ்ரீ சாயிநாதர் ஆவாஹனம்**
**ஓம் ஸ்ரீஷீரடி நாதா ஆவாஹயாமி**
**ஆஸ நம் ஸமர்ப்பயாமி (புஷ்பம் சேர்க்கவும்)**

# அங்க பூஜை

| | |
|---|---|
| ஓம் தீர்த்தபாதாய நம: | பாதௌ பூஜயாமி |
| ஓம் பலாய நம: | ஜங்கே பூஜயாமி |
| ஓம் ஆதார பூதாய நம: | ஜானுனி பூஜயாமி |
| ஓம் விஸ்வப் பிரபூஜிதாய நம: | ஊரு பூஜயாமி |
| ஓம் ஜிதேந்திரியாய நம: | ஹுஹயம் பூஜயாமி |
| ஓம் ஸ்திதப் பிரக்ஞாய நம: | கடிம் பூஜயாமி |
| ஓம் மிதாஸவாய நம: | உதரம் பூஜயாமி |
| ஓம் விசாலவக்ஷஸ்யே நம: | வக்ஷதஸ்வம் பூஜயாமி |
| ஓம் சுக்த ஹ்ருதயாய நம: | ஹ்ருதயம் பூஜயாமி |
| ஓம் சிஷ்ய வத்ஸவராய நம: | ஸ்கந்தோ பூஜயாமி |
| ஓம் ஆத் மோத்தாரகாய நம: | புஜம் பூஜயாமி |
| ஓம் தான ஹஸ்தாய நம: | ஹஸ்தாந்பூஜயாமி |
| ஓம் கம்புகண்ட்யை நம: | கண்ட்டம் பூஜயாமி |
| ஓம் பிரசன்னவதனாயை நம: | முகம் பூஜயாமி |
| ஓம் ம்ருது பாஷணாயை நம: | ஜீஹ்யம் பூஜயாமி |
| ஓம் கருணாவிதயே நம: | நேத்ரே பூஜயாமி |
| ஓம் சாஸ்ஷ்ரானு பாரினே நம: | சிரஸ் பூஜயாமி |
| ஓம் ஸர்வக்ஞ்ஞானாய நம: | ஸர்வான்யங்கானி பூஜயாமி |

# ஸ்ரீஷிர்டி சாயிபாபா அஷ்டோத்திரம்
# ஸ்ரீ ஸாயிநாத அஷ்டோத்திரம்

ஓம் ஸ்ரீ ஸாயிநாதாய நம:
ஓம் லஷ்மி நாராயணாய நம:
ஓம் கிருஷ்ண, ராம சிவ மாருத்யாதி ரூபாய நம:
ஓம் சேஷ சாயினே நம:
ஓம் கோதாவரீ தடசீரடி வாஸினே நம:
ஓம் பக்த ஹ்ருதாலாய நம:
ஓம் ஸர்வ ஹ்ருத்வாஸினே நம:
ஓம் பூதாவாஸாய நம:
ஓம் பூதப வியத் பாவ வர்ஜிதாய நம:
ஓம் காலாதீதாய நம:
ஓம் காலாய நம:
ஓம் கால காலாய நம:
ஓம் கால தர்பதமனாய நம:
ஓம் ம்ருத் யுஞ்ஜாயாய நம:

ஓம் அமர்த்யாய நம:
ஓம் மர்த்தாபயப்ரதாய நம:
ஓம் ஜீவா தாராய நம:
ஓம் ஸர்வாதாராய நம:
ஓம் பக்தாவன ஸமர்த்தாய நம:
ஓம் பக்தாவன ப்ரதிக்ஞாய நம:
ஓம் அன்ன வஸ்த்ராய நம:
ஓம் ஆரோக்ய க்ஷேமதாய நம:
ஓம் தன மாங்கல்யப்ரதாய நம:
ஓம் ருத்திஸித்திதாய நம:
ஓம் புத்ர மித்ர களத்ர பந்துதாய நம:
ஓம் யோகக்ஷே மவஹாய நம:
ஓம் ஆபத்பாந்தவாய நம:
ஓம் மார்க்க பந்தவே நம:
ஓம் புக்தி முக்தி ஸவர்கா பவர்கதாய நம:
ஓம் ப்ரியாய நம:
ஓம் பிரீதிவர்த்தனாய நம:
ஓம் அந்தர்யா மிணே நம:
ஓம் ஸச்சி தாத்மனே நம:
ஓம் ஆனந்தாய நம:
ஓம் ஆனந்த தாய நம:
ஓம் பரமேச்வராய நம:
ஓம் பரப்ரம்ஹணே நம:
ஓம் பரமாத்மனே நம:
ஓம் ஞானஸ்வரூபிணே நம:
ஓம் ஜகத: பித்ரே நம:
ஓம் பக்தானாம்மாத்ருதாத்ரு பிதாமஹாய நம:
ஓம் பக்தா பயப்பிரதாய நம:
ஓம் பக்த பராதீனாய நம:
ஓம் பக்தானுக் ரஹ காதராயநம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் பக்தி சக்திப் ரதாய நம:
ஓம் ஞான வைராக்யதாய நம:
ஓம் ப்ரேமப்ரதாய நம:
ஓம் ஸம்சயஹ்ருதய தௌர்பல்ய
பாபகர்மவாஸனா க்ஷயகராயநம:

ஓம் ஹ்ருதயக்ரந்திபேதகாய நம:
ஓம் கர்மத்வம்ஸினே நம:
ஓம் சுத்த ஸத்வஸ்திதாய நம:
ஓம் குணாதீத குணாத்மனே நம:
ஓம் அனந்த கல்யாணா குணாய நம:
ஓம் அமித பராக்ரமாய நம:
ஓம் ஜயினே நம:
ஓம் துர்தர்ஷ சேஷாப்யாய நம:
ஓம் அபராஜிதாய நம:
ஓம் திரிலோ கேஷீ அஸ்கந்திதகதயே நம:
ஓம் அசக் யரஹிதாய நம:
ஓம் ஸுர்வ சக்தி மூர்த்தியே நம:
ஓம் ஸீருபஸீந்தராய நம:
ஓம் ஸீலோசனாய நம:
ஓம் பஹிரூப விச்வமூர்த்தயே நம:
ஓம் அரூபாவ்யக்தாய நம:
ஓம் அசிந்தர்யாய நம:
ஓம் ஸுக்ஷ்மாய நம:
ஓம் ஸர்வாந்தர்யா மிணே நம:
ஓம் மனோ வாகதீதாய நம
ஓம் ப்ரமேமூர்த்தயே நம:
ஓம் ஸுலபதுர்லபாய நம:
ஓம் அஸஹாய ஸஹாயாய நம:
ஓம் அநாத நாத தீன பந்தவே நம:
ஓம் ஸர்வ பராப்ருதே நம:
ஓம் அகர் மானேக கர்ம ஸுகர்மிணே நம:
ஓம் புண்யச்ரவண கீர்த்தனாய நம:
ஓம் தீர்த்தாய நம:
ஓம் வாஸு தேவாய நம:
ஓம் ஸதாம் கதயே நம:
ஓம் ஸத்பராயணாய நம:
ஓம் லோக நாதாய நம:
ஓம் பாவ நாந காய நம:
ஓம் அம்ருதாம்சவே நம:
ஓம் பாஸ்கரப்ரபாய நம:
ஓம் ப்ருஹ்மசர்யதபஸ் சர்யாதி ஸுவ்ரதாய நம:

**ஓம் ஸத்யதர்ம பாராயணாய நம:**
**ஓம் ஸித்தேச் வராய நம:**
**ஓம் ஸித்த ஸங்கல்பாய நம:**
**ஓம் யோகேச் வராய நம:**
**ஓம் பகவதேம:**
**ஓம் பக்தவத்ஸலாய நம:**
**ஓம் ஸத்புருஷாய நம:**
**ஓம் புருஷோத்தமாய நம:**
**ஓம் ஸத்யதத்வ போதகாய நம:**
**ஓம் காமாதி ஸர்வ அக்ஞான த்வமஸினே நம:**
**ஓம் அபேதா நந்தானு பவப்ர தாயநம:**
**ஓம் ஸமஸர்வ மதஸம் மதாய நம:**
**ஓம் தக்ஷிணா மூர்த்தியே நம:**
**ஓம் வேங்கடேச ரமணாய நம:**
**ஓம் அத் புதானந்தசர்யாய நம:**
**ஓம் ப்ரபன்னார்த்திஹராய நம:**
**ஓம் ஸம்ஸார ஸர்வ துவக்க க்ஷயகாரய நம:**
**ஓம் ஸர்வவித் ஸர்வ தோமுகாய நம:**
**ஓம் ஸர்வாந்தர் பஹிஸ்தி தாய நம:**
**ஓம் ஸர்வ மங்களகராய நம:**
**ஓம் ஸர்வா பீஷ்டப்தராய நம:**
**ஓம் ஸமரஸ ஸன்மார்க்க ஸ்தாபனாய - நம:**
**ஓம் ஸ்ரீஸமர்த்த ஸத்குர ஸாயிநாதாய நம:**

அஷ்டோத்திரம் சொல்லி முடிந்த உடன் தூபம், தீபம் காட்டி பால்கோவா நிவேதனம் செய்து கற்பூரம் காட்டி விட்டு கதைகளை சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு கதை முடிவிலும் ஒரு தேங்காய் உடைத்து ரவாலட்டு நைவெத்தியம் செய்ய வேண்டும்.

## சாயி சத்ய விரத கதை

அதர்மங்களை அழித்து தர்மத்தை நிலை நாட்ட யுகங்கள் தோறும் பகவான் அவதரிப்பார் என்பது கீதாசாரம். ஸ்ரீ கிருஷ்ணாவாதராத் திற்குப் பிறகு இந்தக் கலியுகத்தில் முனி ஸ்ரேஷ்டர்களும் தபோ முனிகளும் தோன்றி, நாடும், மக்களும் சுபிட்சம் பெற எத்தனையோ தபங்களும், ஜபங்களும் ஹோமங்களும் யாகங்களும் செய்து உலகம் மேன்மை பெற முயன்ற போதிலும் மக்கள்மனம் திருந்த எந்த

முகாந்திரம் இல்லாமல் போனது. மக்கள் மனம் மததர்மங்களை மறந்து, பணம் ஒன்றே பிரதானமாகவும், காமம் ஒன்றே சிருஷ்டிக்கு மூலதனமாகவும் எண்ணிக்கொண்டு ஒரு மாயையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தனர். முன்பு யுகங்கள் தோறும் ஒரு அரக்கன் தான் இருப்பான், அவர்களை வதம் செய்ய பகவான் அவதரிப்பார். ஆனால் இந்த கலியுகத்திலோ கணக்கற்ற கம்சன்கள் எண்ணிலடங்கா நரகாசுரன்கள் பல நூறு ராவணன்கள் என்று அரக்கர்கள் பல்லாயிரம் பேர் இருந்தும் மக்கள் மனம் பக்தியில் நாடுவதில்லை. மத தர்மங்களை கடைப்பிடிப்பதில்லை. சுயநலமே பிரதானமாகக் கொண்டு நிஜமான தர்மங்களை மறக்கலாயினர்.

இதைக் கண்ணுற்ற ஸாது ஸஜ்ஜனங்கள் யோகிகள், சித்தர்கள், தபஸ்விக்கள் அனைவரும் ஒன்று கூடி சிவ பெருமானை நோக்கி கடுந்தவம் புரிய, சிவபெருமானும் பிரசன்னமானார், கோரிக்கைகளை பரிவோடு அணுகிப் பின்னர் கூறியதாவது.

''உங்கள் மனக்குறை எனக்கு புரிகிறது.

நீங்கள் கவலைப்பட வேண்டாம் அதர்மங்களை ஒழிக்க ஸாது ரூபத்தில் இறைவன் தோன்றப் போகிறான். சிவ, ராம, கிருஷ்ண ரூபமாகவும், தத்தாத்ரேய ஸ்வரூபமாகவும், ஆஞ்சநேய அவதார மாகவும், அம்மன் ரூபமாகவும் ஏசு, அல்லா அவதாரமாகவும், ஒருவர் தோன்றப் போகிறார். அவர் பக்கிரி போல காட்சியளிப்பார். பார்ப்பதற்கு பரமசாது, நிஜத்தில் ரௌத்ர மூர்த்தி. கருணையில் கர்ணன். கொடுப்பதில் லட்சுமி. அவர் ஷிர்டி என்ற கிராமத்தில் தன் 16 வயதில் அவதரிப்பார். அவர் ''சாயி'' என்றழைக்கப் படுவார். இவர் தோன்றிய பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதர்மங்கள் அழிந்து விடும்'' என்று கூறி மறைந்தார்.

ஸாது ஸஜ்ஜனங்கள் சந்தோஷ மிகுதியாய் ஆனந்தத் தாண்டவம் ஆடினர்.

''ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி'' என்று தியானித்து கதை படிக்கவும்.

## கதை 1 - பாலயோகி

கோதாவரி தீர்த்தத்தில், மஹாராஷ்டிர மாநிலம் அஹமத் நகர் ஜில்லா, கோபர்கான் தாலுக்காவில் ஷீர்டி என்ற குக்கிராமத்தில் 1855ம் வருடம் நல்ல வெயில் காலத்தில் ஊருக்கு வெளியே வேப்பமரத்தின் அடியில் பக்கீர் போன்ற தோற்றம் உள்ள 16வயது பாலகன் தோன்றி பக்தர்களுக்கு தரிசனம் தந்தார். நீளமான அங்கி, தலையில் ஒரு முண்டாசு, ஒரு கையில் சட்கா, மறு கையில் பிச்சையெடுக்கும் அலுமினிய பாத்திரம் தவிர வேறெதுவும் அவரிடம் இல்லை.

யாருடனும் எதுவும் பேசாமல், ஒன்றும் கேட்காமல் எப்போதும் நிஷ்டையில் இருந்த பாலயோகி மேல் சிறுவர்கள் கற்களை வீசினார்கள். ஆனாலும் அந்த யோகி அதைப் பொருட்படுத்தவில்லை. அந்த இடத்தை விட்டுப் போக வில்லை. முகத்தில் சிரிப்பு சிறிதும் குறையவில்லை. கண்களில் ஒளி மிகுந்து காணப்பட்டது.

இந்த சமயத்தில் ஒரு நாள் அந்த வழியாக அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒரு குஷ்டரோகி மிகவும் அவஸ்தையுடன் அங்கு வந்தார். பாலகன் அவரை அன்புடன் உடம்பு முழுவதும் தடவியதும் குஷ்டரோகம் மாயமாய் மறைந்து விட்டது. அவர் உடல் நலம் நன்கு குணமடைந்து ஊருக்குள் சென்று இது பற்றி சொன்னார். அதை கேட்டதும் ஊரிலுள்ள மக்கள் அனைவரும் இந்த பாலயோகியை காண திரள் திரளாக வேப்பமரத்திற்கு வந்தார்கள். அப்போது அந்த கூட்டத்தில் ஒரு குருடன் சிக்கித்தவித்து மிகவும் துன்பத்துடன் வந்தபோதுகீழே தள்ளி விடப்பட்டான். பாலயோகி ''அல்லா அச்சா கரேகா'' என்று கண்ணைத் தடவியதும், கண் பார்வை கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தான் அந்த பக்தன். ''அல்லா அச்சா கரேகா'' என்றதும் முடவன்நடப்பதும், வியாதியஸ் தர்கள் நலமடைவதும், எல்லாமே நல்லதாகவே நடந்தது. இந்த யோகி பண்ணும் ஒவ்வொரு செயலும் மக்களுக்கு மிகவும் ஆச்சர்யத்தைக் கொடுத்தது. இந்த விஷயம் ஊருக்குள் விரைவாக பரவி விட்டது. ஆனாலும் வேப்ப மரத்தடியை மட்டும் விடவே இல்லை. அந்த பாலயோகி மக்கள் தந்ததில் ஒன்றிரண்டு எடுத்துக் கொண்டு மீதியை எல்லோருக்கும் விநியோகித்து விடுவார். ஆனாலும் இவர் பெயர், குலம் கோத்திரம் என்ன என்பதுயாருக்கும் தெரியவில்லை. அவரால் தபஸ்பண்ண முடியவில்லை. மக்கள் திரள், திரளாக வந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் அங்கிருந்து மறைந்து விட்டார். எங்கு போனார், எப்படி போனார் என்பது தெரிய வில்லை.

## கண்டோபோ கோயிலில் பூசாரியிடம் கேள்வி கேட்டல்

ஷீரடியில் கண்டோபோ ஆலயத்தில் ஒரு நாள் பூசாரிக்கு சாமி வந்தது. அப்போது மக்கள் அவரிடம் இங்கு வேப்பமரத்தடியில் ஒரு பாலயோகி இருந்தார். அவர் எதையும் எதிர்பார்க்காமல் எல்லா நோயையும் தீர்த்தார். எல்லா நன்மையும் செய்தார். அவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை. அதைப்பற்றி சொல்லும்படி கேட்பார்கள். அப்போது ஆலயத்தின் உள்ள வேப்பமரத்தின் அருகில் தோண்டினார்கள். அங்கு உள்ளே படிக்கட்டுகள் இருந்தது. ஒரு பெரிய பாராங்கல் இருந்தது. அதனருகில் ஒரு பெரிய அறை இருந்தது. அந்த அறைக்குள் நிறைய அகல்கள் பிரகாசமாக எரிந்து

கொண்டிருந்தன. ''இங்கு 12 வருடம் பாலயோகி தபஸ் பண்ணினார். நீங்கள் அவரை துன்புறுத்தியதால் திரும்ப வருவேன் என்று மறைந்து விட்டார்'' என்று பூசாரி சொன்னார். உடனே எல்லாவற்றையும் மூடி வைத்து விட்டனர்.

## சாந்த் பாட்டேலுக்கு 'விந்தயோகி' பரிச்சயம்

1858ம் வருஷம் சாந்த் பட்டேல் என்பவர் கடும் வெயிலில் குதிரை சேனத்தை தோளில் போட்டுக் கொண்டு நடந்து கொண்டிருந்தார். பக்கத்தில் ஒரு சட்கா வைத்துக் கொண்டு இள வயது பக்கிரி ஜடா முடியுடன் நீள அங்கி, கையில் சிலிம், பிச்சைப் பாத்திரம் பக்கத்தில் வைத்திருந்தார். சாந்த் பாட்டீலைப் பார்த்து ''நீ மிகவும், களைத்து போயிருக்கிறாய், கொஞ்சம் சிலிம் குடுச்சிட்டுபோ'' என்றார். ''சரி'' என்று பாட்டீல் உட்கார்ந்து விட்டார். பக்கிரி சட்காவில் பக்கத்தில் தட்டியபோது நீர் வந்தது. அதில் துணியை நனைத்து சிலிமில் (புகைகுழல்) பிழிந்து சிலிமை தயார் பண்ணினார். திரும்பவும் தரையை சட்காவால் அடித்த போது நெருப்பு வந்தது. சிலிமை அதில் பற்ற வைத்து தானும் உறிஞ்சி, பாட்டிலுக்கும் கொடுத்தார். இதையெல்லாம் பார்த்த சாந்த் பாட்டீலுக்கு மிகுந்த ஆச்சரியமாகி விட்டது. மண்ணைத் தட்டியும் நீர், நெருப்பு இரண்டுமே வந்தவுடன் ஆச்சரியப்பட்டார். ''குதிரைக்கு போட வேண்டிய குதிரை சேனம் உன் தோளில் இருக்கிறதே'' என்று பக்கிரி கேட்டார். உடனே அவர் ''ஐயா'' என் குதிரை தொலைந்து விட்டது. எங்கெங்கோ தேடியும் கிடைக்கவில்லை'' என்றார். அதற்கு அந்த இளவயது பக்கிரி சிரித்தார். ''உன் குதிரை எங்கேயும் போகலை. அதோ அந்தப் பக்கம் பார்'' என்றதும் ஒரு ஒளி வந்தது. ஒளி வந்த திசையை சாந்த்பாய் நோக்க அங்கே அவர் குதிரையைக் கண்டார். உடனே ஓடிச் சென்று குதிரையை ஆரத்தழுவி அதனுடன் நன்றி சொல்ல ஞானியை நோக்கி நடந்து வந்தார். சாந்த்பாட்டீலுக்கு திரும்பிவரும் நேரமும், தூரமும் மிகுதியாகப்பட்டது. இருந்தபோதிலும் ஞானியைக் கண்டு அவரை ஒரு பெரிய யோகி என்று வாயாரப் புகழ்ந்து அவர் காலில் விழுந்து வீட்டுக்கு அழைத்து தினமும் அவருக்கு சேவை செய்தபடி இருந்தார். சாந்த்பாய் மருமகனுக்கு கல்யாணம் நிச்சயம் ஆயிற்று. மணப்பெண்ணின் ஊரோ ஷிர்டி. ஆகவே திருமண கோஷ்டி வண்டி கட்டிக்கொண்டு பாலயோகியுடன் ஷிர்டிக்கு விஜயமானது. கந்தோபா கோயிலருகில் அனைவரும் இறங்க மஹால் சபாதி இறங்குபவர்களை வேடிக்கை பார்க்க அப்போது பாலயோகியும் இறங்கினார். மஹல்சாபதி ஆச்சரியம் கலந்த பக்தியுடன் பாலயோகியைப் பார்த்த மாத்திரத்தில் ''ஆவோ சாயி'' (சாயி என்றால் மராட்டியில் ஸ்வாமி), என்று கூக்குரலிட்டார். சில காலம் ஷிர்டியில் தங்கி விட்டு மாயமாய் மறைந்த அந்த அற்புத சக்தி வாய்ந்த அருள்

தெய்வம் மீண்டும் ஷிர்டிக்கு திரும்பியதில் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். மஹல் சாபதியால் ''சாயி'' எனப் பெயரிடப்பட்ட பாபா ''சாயிபாபா'' வாக ஷிர்டியில் அவதாரம் எடுத்து தன் பக்தி சாம்ராஜ்யத்தை ஆரம்பித்து பக்தர்களுக்கு அருள ஆரம்பித்தார்.

ஸ்ரீ ஸமர்த்த ஸத்குரு ''ஸ்ரீ ஸாயிநாத் மஹராஜ்கிஜெ''

தேங்காய் உடைத்து ரவா லட்டு நிவேதனம் செய்யவும்.

## கதை-2

என்னதான் அவதார புருஷர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் சோதனைகள் வந்துள்ளது. தாடகைவதம் மாரீசவதம், அகல்யா ஜாபவிமோசனம் பரசுராமகர்வபங்கம், வனவாசம் போன ராமர் - பரதர் அழைத்தும் வராமல் ''சத்ய தீட்சை'' மேற்கொண்டது பல்லாயிரக் கணக்கான அரக்கர்களை ஸ்ரீ ராமர் வதம் செய்த போதும் வாலிவதம் ஒன்றில்தான் சுக்ரிவனுக்கே நம்பிக்கை வந்தது. யார் நம்பியும் ராவணன் ராமரை தெய்வமாக நம்பவில்லை. ஏனென்றால் ராவணவதமே ஸ்ரீ ராமாவதார நோக்கம் அதுவே தெய்வ நிர்ணயம். ஸ்ரீ கிருஷ்ணன் பற்றி துரியோதனுக்கு அனைத்தும் தெரியும் இருந்தாலும் சகுனி பேச்சைக் கேட்டு பகவானை மதிக்கவில்லை. அதே போல் ஸ்ரீ ஸாயி கிருஷ்ண ஸ்வரூபியாக இருந்தாலும் சிலர் பாபாவை இந்துவாக ஏற்றுக் கொள்ளாமலிருந்தனர். சிவன் ஆலயங்களில் யோகிகளும் ரிஷிகளும் தங்குவது வழக்கம். ஆனால் பார்ப்பதற்கு முஸ்லீம் மாதிரி தோற்றமளித்த பாபாவை கந்நோபா ஆலயத்தில் தங்க வைக்க சிலர் அனுமதி மறுத்தனர். பின்னர் மஹால் சாபதியும் மற்ற பக்தர்களும் பெருமுயற்சி எடுத்து ஊருக்குள் ஒரு பாழடைந்த மசூதியில் பாபாவைத் தங்க வைத்தனர். பாபா அந்த மசூதிக்கு ''துவாரகமாயி'' என்று பெயர் சூட்டினார். ஸ்ரீ கிருஷ்ணர் ''துவாரகவாஸி'' ஸ்ரீ ஸாயிபாபா துவாரகமாயி வாஸி'' ஆனார். ''துவாரகமாயியில்'' பாபா துளசி பிருந்தாவனம் அமைத்தார். தினமும் மாலை வேளைகளில் துவாரகமாயியைச் சுற்றி அகல் விளக்கேற்றினார். பின்னாளில் ''துணி'' என்ற ''நித்யாக்னி'' வளர்ந்து நித்யஹோமம் செய்தார். ஒரு அக்னிஹோத்ரியாக தன்னை வெளிப் படுத்திக் கொண்டார். துளசி, துணி, அகல்விளக்கு ஆகியவற்றின் மூலம் பாபா இந்துவாகவும் கஃப்னி, முண்டாசு கட்டி முஸ்லீமாகவும் காட்சி தந்தார். பக்திப் பரவசத்தால் பாபாவைத் தொழ துவாரகமாயிக்கு வந்த இந்து பக்தர்கள் முஸ்லீம்களால் துரத்தப் பட்டனர். அவரை முகம்மதியராகக் கருதி கந்தோபா ஆலயத்தில் அனுமதி மறுக்கப் பட்டதால் மசூதிக்கு இந்துக்கள் வரக்கூடாது என்று தடுத்தனர். இந்த நிலையில் மஹல்லசாபதி பாபாவுக்கு பூஜை செய்ய துவாரகமாயிக்கு வர அவரை முஸ்லீம்கள் நையப்புடைத்தனர். மஹல் சாபதிக்கு

விழுந்த ஒவ்வொரு அடியும் அவருக்கு எந்த வலியையும் ஏற்படுத்த வில்லை அவரின் ''ஸாயிபாபா ஸாயிபாபா'' என்ற நாமஸ்மரனை அவர் மீது விழுந்த அடியை வலியிழக்கச் செய்தது மாறாக பாபா அந்த அடிகளை வாங்கி, பக்தனுக்காகத் தாங்கி ரண வேதனையடைந்தார். இதைப் பார்த்தும் அவர்கள் திருந்தவில்லை மனம் வெறுத்து பாபா மசூதியிலிருந்து மாயமானார். பின்னர் இந்துக்களும் முஸ்லீம்களும் தங்கள் செயலுக்கு வருந்தி பாபாவை மனமுருக பிரார்த்தனை செய்தனர். பின்னர் பாபா பிரத்யட்சம் ஆகி அருளாசி வழங்கினார்.

மசூதியும், மந்திரும் தெய்வங்களைப் பொறுத்தவரை ஒன்று தான் என்பதையும் எல்லா ஜீவராசிகளிலும் நான் இருக்கிறேன் என்றும் அதற்கு விளைவிக்கும் தீங்கு ஸ்ரீ ஸாயிபாபாவிற்கு அர்ப்பணமாகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்தனர்.

## பாறாங்கல் கீழ்தண்ணீர் தரிசனம்

ஒரு சமயம் பாபாவின் பரமபக்தரான நாணா சந்தோர்க்கர் தன் வேலை நிமித்தமாக ''ஹரிசந்திரகுட்டை'' என்ற ஊருக்கு நல்ல வெயில் வேளையில் பயணமானார். ஒரு கானகத்தின் வழியாக அவர் செல்லும் பொழுது அவருக்கு கடுமையான தாகம் எடுத்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. பூமி வரண்டு போய் இருந்தது. வேலையாட்கள் என்ன செய்வது என்று அறியாது திகைத்தனர். நாணாவோ ''பாபா தாகம், பாபா தாகம்'' என்று கூறியபடி மயங்கி விழுந்தார்.

அதே சமயம் மசூதியில் பாபா ''என்ன நாணா'' என்று கூறியபடி மசூதியை விட்டு வெளியே வந்து மறுபடியும் ஆசனத்தில் அமர்ந்தார்.

மயங்கி விழுந்த நாணாவிடம் ஒரு காட்டுவாசி வந்து ''உனக்கு தண்ணி தானே வேண்டும் உன் தலைக்கு கீழே இருக்கும் பாறையை விலக்கிப்பார், வேண்டும் அளவிற்கு தண்ணீர் கிடைக்கும்'' என்று கூறிச் சென்றான்.

பாறையை விலக்கி வேண்டுமளவிற்கு தண்ணீர் குடித்த நாணா திருப்தியாக தன் வேலையை தொடர்ந்தார்.

பின்னர் பாபாவை சந்திக்க சென்ற நாணாவை, பாபா'' என்ன படித்து என்ன லாபம் 'நட்டநடுப் பகலில் அதுவும் கொளுத்தும் வெயிலில் கையில் தண்ணி இல்லாமல் யாராவது ஹரிச்சந்திர குட்டா போவார்களா? நீ என்னை அழைத்தது என் காதில் விழுந்தது. அது தான் நான் காட்டு வாசியாக வந்து உன் தாகத்தைத் தீர்த்தேன் என்றார்.

''அழைப்பவர் குரலுக்கு வருவேன் அவர்களுக்கு தேவை யானதைத் தருவேன்'' என்று தன் பக்தர்களுக்கு அபயம் அளிப்பவர் தான் ஸ்ரீ ஸாயி பாபா ஸமர்த்த ஸத்குரு ஸ்ரீ ஸாயிநாத் மஹராஜ்கிஜே.

(தேங்காய் உடைத்து ரவாலட்டு நைவேத்தியம் செய்யவும்)

# கதை - 3

பாபா தன் பக்தர்களின் பாரத்தை தன் மீது சுமத்திக் கொள்வார். இவருக்கு இணையான தெய்வம் வேறொருவருமில்லை. அதற்கு உதாரணமாக இந்தக் கதைப் படியுங்கள். அமராவதி பட்டிணத்தில் தாதா சாஹேப் கபர்டியா என்று ஒரு வக்கீல் இருந்தார். இவர் வீட்டில் அனைவரும் பாபா பக்தர்கள் எல்லோரும்ஷீரடிக்கு வந்தார்கள். அப்போது அவருடைய குழந்தைக்கு காய்ச்சல் வந்தது. இரண்டு மூன்று நாட்களாக ஜுரம் இருந்து கொண்டே இருந்தது. உடம்பில் எல்லாம் கொப்பளங்கள் வந்துவிட்டன. டாக்டரிடம் கொண்டு போய் காண்பித்ததில் 'பிளேக் நோய்' வந்திருப்பதாக சொன்னார். இது ரொம்ப கொடிய வியாதி. புற்று நோயை விட கொடிய வியாதி. குழந்தையின் தாய் மிகவும் கவலையுற்றார். மசூதிக்கு போய் பாபா காலில் விழுந்து புலம்பி அழுதாள். ஊருக்கு திரும்பி போக அனுமதி கேட்டாள். பாபா அந்த தாயை ஆறுதல் கூறி அழுவதை நிறுத்தச் சொன்னார். ''நான் இங்கு இருக்கும்போது நீ ஏன் அனாவசியமாக கவலைப்படுகிறாய்! உன் குழந்தைக்கு வந்தது 'பிளேக் வியாதியா? என் உடம்பைப்பார்'' என்று கப்ஃனியை தூக்கி காண்பித்தார். உடம்பு பூராவும் கோழி முட்டை அளவுக்கு பெரிய பெரிய கொப்பளங்கள் இருந்தன. பாபா உடம்பு ஜுரத்தினால் மிகவும் கொதித்தது ''இப்பவாவது உனக்கு தைரியம் வந்ததா'' என்று பாபா கேட்டார். ''அம்மா உன் இருப்பிடத்திற்கு போய் உன் குழந்தையை கொஞ்சு'' என்று சொன்னார். இருப்பிடத்திற்கு சென்று குழந்தையை பார்த்தால் மற்ற சிறுவர்களுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான். தாயைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டு தாயைக் கட்டிக் கொண்டான். உடம்பில் கொப்பளம் இருந்த அடையாளமே இல்லை. ஜுரம் துளிகூட இல்லை. இந்த குழந்தையை காப்பாற்றுவதற்குத்தான் பிளேக் நோயை பாபா தானே ஏற்றுக் கொண்டாரர். பக்தர்களிடம் எப்போதும் கிருபையுடன் இருந்து ரக்ஷிப்பார்.

## தீ உலையிலிருந்து குழந்தையை காப்பாற்றுதல்

ஒரு தீபாவளி அன்று மசூதியில் பாபா 'துணி' அருகில் உட்கார்ந்து கொண்டு சந்தனக் கட்டைகளைப் போட்டுக் கொண்டிருந்தார். திடீரென கட்டைக்குப் பதில் தன் கையை தீக்குள் விட்டார். இதைப் பார்த்த பக்தர்கள் கையை எடுத்தனர். கை மிகவும் ரணமாகி விட்டது. பக்தர்கள் பரிதவித்து கேட்பதற்கு ஒரு மந்தகாசமான புன்னகையுடன் ''என் கை ரணமானால் என்ன; உலையில் விழுந்த குழந்தையை காப்பாற்றவே இப்படிச் செய்தேன்.'' என் பக்தர்கள் என்ன எண்ணினார்கள். நான் 5 அடி சரீரம் ஷீரடியில் மட்டுமே இருக்கிறேன்

என்று நினைப்பது தவறு. உலகமெங்கும் வியாபித்திருக்கிறேன். எங்கெங்கு என் நாமஸ்மரனை பண்ணுகிறார்களோ, கஷ்டப்படு பவர்கள். அநாதைகள் யார் என்னை கூப்பிட்டாலும் ஓடிப் போவேன். இப்ப என்ன நடந்தது தெரியுமா! ஷீரடிக்கு 300 மைல்களுக்கு அப்பால் ஒரு குயவன் இருந்தார். இவர் என் பக்தர். இவருடைய மனைவியும் என் பக்தர் தான். ஏழை தம்பதிக்கு ஒரே ஒரு சின்ன குழந்தை. மனைவி உலைக்களத்தில் இருந்த துருத்தியில் வேலை செய்து கொண்டிருந்தாள். அப்போது அவளது கணவன் அவளைக் கூப்பிட்டான். அவள் தனது இடுப்பில் குழந்தை இருப்பதை மறந்து அதை விட்டுவிட்டு அவசரமாக ஓடினாள். ஊது உலைக்குளத்தில் குழந்தை நழுவி விழுந்து விட்டது. நான் உடனே உலைக்குளத்தில் கையை விட்டு குழந்தையைக் காப்பாற்றினேன். என் கரங்கள் வெந்து போனதைப் பற்றி நான் பொருட்படுத்தவில்லை. குழந்தையின் உயிர் காக்கப்பட்டதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார் பாபா. ஆனாலும் இதை மக்கள் நம்பவில்லை. அந்த தம்பதியினர் குழந்தையுடன் வந்து நடந்த நிகழ்ச்சியை சொன்னவுடன் அனைவரும் பேரானந்தத்தால் திகைத்துப் போனார்கள். பாபாவைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டார்கள்.

முதலையின் வாயில் தன் கால் பிடிப்பட்ட யானை கஜேந்திரன். ''நாராயணா'' என்று கூவி அழைத்த உடன் மஹா விஷ்ணு வைகுண்டத்திலிருந்து புறப்பட்டு வந்து காத்து, ''கஜேந்திர மோட்சம்'' தந்தார்.

ஆனால் கலியுக பிரத்யட்ச கருணாமூர்த்தி ஸ்ரீ ஸாயி பாபாவோ அபயம் என அழைத்த அன்பனின் குழந்தையை தான் இருக்கும் இடத்திலிருந்தே காத்து ரக்ஷித்தார். இதுவல்லவோ ஸ்ரீ ஸாயி பாபாவின் பெருமை.

**ஸமர்த்த சத்குரு ஸாயிநாத் மகராஜ் கீஜே**
**(தேங்காய் உடைத்து ரவாலட்டு நைவேத்தியம் செய்யவும்)**

## கதை - 4

ரத்தன்ஜி வாடியா, நைஜாம் சமஸ்தானத்தை சேர்ந்த நாந்தேடை (Nanded) சேர்ந்தவர்.

பெரும் தனவந்தர். ஆள், அம்பு, சேனை, அரண்மனை போல வீடு, காவலுக்கும் ஏவலுக்கும் ஆட்கள், நிலங்கள், வயல்கள், தோட்டங்கள், யாவும் நிரம்பப் பெற்றவர்.

இத்தனை, இருந்தும் அவருக்கு ஒரு மனக்குறை பேர் சொல்ல பிள்ளை இல்லை. தனக்குப் பிறகு தன் சொத்தைக் கட்டிக் காக்க

வாரிசு இல்லை. புத்திர சோகம் முகத்தில் தாண்டவமாட சோர்ந்து போனார். வாடியா பார்க்காத மருத்துவம் இல்லை கேட்காத ஜோசியம் இல்லை அவருக்கு சந்தானப் பிராப்தி அறவே இல்லை என்று ஜோசியர்கள் கைவிரித்து விட்டனர். ரத்தன்ஜி வாடியாவுக்கு ருஸ்தும் வாடியா என்று இன்னொரு பெயரும் உண்டு.

இந்த நிலையில் பாபாவின் உபாசகரான தாஸ்கனு மகராஜை ரத்தன்ஜி சந்திக்க நேர்ந்தது. தாஸ்கனுவிடம் ரத்தன்ஜி தன் மனக்குறையைக் கூற தாஸ்கனு ஷிர்டிக்கு போய்பாபாவை தரிசனம் செய்தால் ரத்தன்ஜியின் மனக்குறை தீரும் என்றும் ஜோதிட அனுமானங்களை வெல்ல வல்லவர் பாபா என்றும் கூறினார்.

ரத்தன்ஜி ஷிர்டிக்கு போய் பாபாவை தரிசனம் செய்தார். மிகுந்த பரவசமடைந்தார். ரத்தன்ஜியிடம் பாபா தனக்கு 5 ரூபாய் தக்ஷிணை தரவேண்டும் என்று கேட்டார். ரத்தன்ஜி 5 ரூபாயை எடுக்க பாபாவோ ரத்தன்ஜி ஏற்கனவே 3¾ ரூபாய் கொடுத்து விட்டதாகவும் மீதி 1¼ ரூபாய் தந்தால் போதும் என்று கூற ரத்தன்ஜி முழித்தபடி 1¼ ரூபாய் தக்ஷிணை தந்தார்.

பின்னர் ரத்தன்ஜி கொண்டு போன பழக்கூடையிலிருந்து பாபா நான்கு பழங்களை திருமதி ரத்தன்ஜிக்கு கொடுத்து ''உனக்கு நான்கு பிள்ளைகள் பிறப்பார்கள்'' என்று கூறி ரத்தன்ஜி தலையில் தடவி ஆசி வழங்கி உதி பிரசாதம் தந்தனுப்பினார்.

''ரத்தன்ஜிக்கு சந்தோஷம் ஒரு புறம். மற்றொரு புறம் தான் இப்போது தான் ஷிர்டிக்கு முதல் தடவையாக போகிறோம் பின் எவ்வாறு பாபாவிற்கு ஏற்கெனவே 3¾ ரூபாய் தக்ஷிணை தந்திருக்க இயலும் என்று தாஸ்கனுவிடம் கேட்க ''நீயே யோசி'' என்று தாஸ்கனு கூறினார்.

ரத்தன்ஜி ஷிர்டிக்கு புறப்படும் தருணம் நாத்தேடை சேர்ந்த மௌலி சாஹேப் என்ற முஸ்லீம் முனிவர் ரத்தன்ஜி வீட்டுக்கு வர ரத்தன்ஜி அவருக்கு வைத்த விருந்தின் செலவு சரியாக 3¾ ரூபாய் என்பதை உணர்ந்து பாபா சர்வவியாபி என்று கூறி சமாதானமானார்.

ஒருவர் பின் ஒருவராக நான்கு பிள்ளைகள் ரத்தன்ஜிக்கு பிறந்தது.

அவர் பாபாவின் மிகத் தீவிர பக்தரானார். அவர் நினைவாக இன்றும் ருஸ்தும் வாடா என்ற கட்டிடம் ஷிர்டியில் இருப்பதே ரத்தன்ஜியின் அகண்டபக்திக்கு அருமையான சான்று.

## நம்பிக்கை

சேவ்டே மிகச்சிறந்த சாயிபக்தர் அவருக்கு வழக்கறிஞராக வேண்டும் என்று ஆசை. அதற்கான பரிட்சைக்கு தன்னை தயார்

செய்து கொண்டிருந்தார். இருந்தாலும் பாஸாவோமே என்று பயம். இந்த நிலையில் ஷிர்டிக்கு வந்து பாபா தரிசனம் செய்தார் பாபா சேவ்டேயிடம் ''ஏன் பயப்படுகிறாய் நானிருக்க பயமேன் பரிட்சை எழுது பாஸாவாய், வழக்கறிஞர் ஆவாய்'' என்று கூறி ''உதி'' பிரசாதம் வழங்கினார். சேவ்டே மிகுந்த நம்பிக்கையுடன் வீடு திரும்பினார்.

பரிட்சை நாள் வந்தது பாபாவின் உதியை இட்டுக் கொண்டு பாபாவை நினைத்து ஸ்மரித்த படி பரிட்சை எழுதினார்.

பரிட்சை எழுதியவுடன் நண்பர்கள் ''எப்படி பரிட்சை எழுதினாய்'' என்று கேட்க இவரும் தான் எழுதிய பதில்களைக் கூற நண்பர்கள் ''அத்தனையும் தப்பு'' எனக் கூறினார். ''தவறோ சரியோ பாபா என்னைக் காப்பாற்றுவார் இந்த உதி என்னைக் காப்பாற்றும் என்று சேவ்டே கூறினார். அதற்கு நண்பர்கள் இந்த காலத்தில் பாபாவாம் உதியாம் என்று கேலி பேசினார்கள்.

பரிட்சை முடிவு வந்தது. சேவ்டே முதல் வகுப்பில் தேறி வழக்கறிஞரானார். பாபா மீது எத்தனை நம்பிக்கை வைக்கிறோமோ அதை விட பன்மடங்கு பலன் இருக்கும் என்பதை இந்தக் கதை உணர்த்தும்.

**ஸமர்த்த சத்குரு சாயிநாத் மகராஜ் கீ ஜே!**
**தேங்காய் உடைத்து ரவாலட்டு நைவேத்தியம் செய்யவும்**

## கதை - 5

பக்தர்களின் உள்ளங்களை முழுமையாக ஆட் கொண்ட புண்ணியமூர்த்தி, கேட்பவர்க்கு கேட்ட வரம் தரும் கல்தரு பசியோடு இருப்பவர்களுக்கு அன்னமிடும் இந்த காமதேனு ஸ்ரீ ஷிர்டி தக்ஷிணாமூர்த்தி சாலி வாகன வருஷம் 1840 கி.பி. 1910ம் ஆண்டு அக்டோபர் 15 விஜயதசமித் திருநாளில் பிற்பகல் 2.30 மணிக்கு மகா சமாதி அடைந்தார். அப்போது பக்தர்கள் சூழ்ந்திருந்தனர் ''இனிமேல் எங்களுக்கு யார் கதி பாபா'' என்று பாபாவை நோக்கி அழுதவண்ணம் தொழுது நின்றனர்.

அப்போது பாபா சிரித்தபடி, ''நான் வெறும் 5 அடி 3 அங்குல ஸ்தூல சரீரம் மட்டும் தான் என்று நினைத்தீர்களா. மனித அவதாரமெடுத்தால் அதன் தர்மங்களுக்கு ஆண்டவனும் கட்டுப்பட வேண்டும் என்பது விதி. நான் சமாதி நிலை அடைந்த பிறகும் நான் சமாதியிலிருந்து பேசுவேன் உங்கள் சுமைகளை தாங்கிக் கொள்வேன். என் பூத உடல் உங்களோடு பேசும். நீங்கள் நினைத்த மாத்திரத்தில் உங்களிடம் நான் உதயமாவேன். என் மீது நம்பிக்கை வைத்து பொறுமை காக்கும் பக்தன் மனக்குறையை அவர்கள்

எதிர்பார்த்ததை விட அதிகமாக தீர்த்துவைப்பேன். இந்த உலகம் உள்ள வரை சாதி சமயமற்ற சமுதாயம் நல்வழி காண தேவையான உதவிகள் புரிவேன் என் பக்தர்கள் சத்தியத்தையும் நேர்மையையும் கடைபிடிக்க வேண்டும்'' என்று கூறி மகா சமாதி அடைந்தார். சமாதி கோயிலானது. ஸ்ரீ ஸாயிபாபா முரளிதரன் பிரதிஷ்டை செய்ய இருந்த இடத்தில் பிரதிஷ்டையானார். ஷிர்டி திவ்ய க்ஷேத்திரம் ஆனது. சாயியை பணிக சாந்தி நிலவட்டும்.

ஒருமுறை பாபாவின் பரமபக்தரான தாமு அண்ணா பாபாவிடம் ஒரு அனுமானத்தை வினவினார். ''பாபா ஷிர்டிக்கு வந்து உங்கள் தரிசனம் பெற தினமும் பக்தர் கூட்டம் அலை மோதுகிறதே இவர்கள் யாவரும் உங்களுடைய மெய்யான பக்தர்கள்தானா.''

## அதற்கு பாபா அளித்த உவமானம் பின் வருமாறு

''ஒரு மாமரத்தில் நிறைய பூ பூக்கிறது பூப்பதெல்லாம் பிஞ்சாவதில்லை. பிஞ்சுகள் எல்லாம் காயாவதில்லை. காய்கள் எல்லாம் கனியாவதில்லை. நம்பிக்கையோடு பொறுமையாக இருந்து கனியாகும் காய்களாக என் பக்தர்கள் இருப்பார்கள்.

என் பக்தன் விரும்புவதை நான் தருவேன். நான் தருவதை என் பக்தன் விரும்பி ஏற்றுக் கொள்வான்.''

தாமு அண்ணா சமாதானமானார்.

## பக்த நேவாஸ்கர் வீட்டு விருந்து

பாலாஜி பாட்டீல் நேவாஸ்கர் பாபாவின் தீவிர பக்தர். விவசாயம் செய்து வாழ்பவர். ஒவ்வொரு வருடமும் அறுவடையான நெல்லை ஷிர்டிக்கு சென்று பாபாவிடம் சமர்ப்பித்து அவர் அனுமதி பெற்று வீட்டிற்கு எடுத்துச் செல்வார். அவர் காலத்திற்குப் பிறகு அவர் குமாரரும் அதைப் போலவே செய்து வந்தார். பாபா மகா சமாதி அடைந்த பின்னரும் சமாதி மந்திருக்கு எடுத்துச் சென்று கொண்டு வருவது அவர் வழக்கமானது. இந்த மாதிரி சமயத்தில் பாலாஜி பட்டீல் திதி வந்தது. இதற்கு எத்தனை பேர்கள் கூப்பிட்டார்களோ அதற்கு இரண்டு மடங்கு ஆகி விட்டது. பண்ணிய சாப்பாடு போதுமா என்ற சந்தேகம் வந்தது. மறுபடியும் எல்லாம் செய்யலாம் என்றால் நேரமில்லை. மாமியார் மருமகளை கூப்பிட்டு ''நீ எதற்கும் கவலைப்படாதே. எல்லாமே சாய் கிருபை தான். பண்ணறது. பண்ண வைக்கிறது, சாப்பிடுபவர் எல்லாமே அவர் தான். எல்லாப் பொருள்களிலும் 'உதி' பிரசாதத்தைபோடு'' மூடியை முழுவதும் மூடாமல் கரண்டியால் பரிமாறுமளவுக்கு திறந்து பரிமாறச் சொன்னார். மருமகளும் பாபா பக்தர் பாபாவை வேண்டி நமஸ்கரித்து 'உதியை'

அதில் போட்டு பரிமாறத் தொடங்கினாள். பக்த கோடிகளே என்ன ஆச்சர்யம் **10**பேருக்கு மட்டுமே போதுமான உணவு **25** பேர் வயிறு போதுமானதாக ஆனது. இதெல்லாம் சாயியின் மகிமையே என்று வீட்டிலுள்ளவர்கள் எண்ணினார்கள்.

## பி.ஏ. சாக்லா அன்னதானம்

இவர் உதவி நீதிபதி, 1943ம் வருடம் கார் தொட்டி நகரத்தில் சாயி சத்சாதகம் விமரிசையாக நடத்தி மறுநாள் அன்னதானமும் ஏற்பாடு செய்திருந்தார். 1000 பேருக்கு தேவையான சாப்பாடு தயார் செய்திருந்தார். வாழையிலை போட்டு பரிமாறுமுன் 6000 பேர் வந்திருப்பதாக தெரியவந்தது. இதனால் இவர் மிகவும் வருத்தப்பட்டார். சாயி பாபா கோவிலுக்கு சென்று 'ஏய் சாயிநாதா' இதற்குக் காரணம் நான் அல்ல. நீயே தான் பொறுப்பு அப்பா. உன் மேல் அபிமானமும், பக்தியும், சிரத்தையுடனும் ஆரம்பித்த இந்த அன்னதானம் தடங்கலின்றி நடக்கணும். அப்படியில்லையெனில் உங்கள் முன்னால் உயிரை விடுவதை விட வேறு வழி இல்லை'' என்று அழுது கொண்டே பிரார்த்தித்தார். ஒரு அசரீரி கேட்டது. ''பயப்படாதே அப்பா, உதியை எல்லாப் பொருட்களிலும் போட்டு மூடாமல் பரிமாறு'' என்றது. இதைக் கேட்டதும் மகா ஆனந்தம் கொண்டு திக்குமுக்காடிப் போனார். பாபா உதி அவர் கையில் விழுந்தது. இந்த பிரசாதத்தை கண்ணில் ஒத்திக் கொண்டு கடைசி பந்தியில் சாக்லா, பெரிய மனிதர்கள், உதவி செய்தவர்கள், பரிமாறியவர்கள் எல்லோரும் சேர்ந்து 100 பேர்களுக்கு மேல் வந்தனர். சாக்லா 1000 பேருக்கு செய்ததை 6000 பேர் சாப்பிட்டார்களே. இதையும் மீறி நமக்கு சாப்பிட போதுமா என்று எண்ணினார். ஆனால் கடைசி பந்தியில் சாப்பிட்ட பிறகு பக்தியுடன் பாபாவின் கீர்த்தனை களை பாடினார்கள். இந்த கதையை கேட்டவர்கள் சாக்லாவும், குடும்பத்தாரும் பாபாவிடம் மிகவும் பக்தியுடையவர்களாக இருந்ததால் இது சாத்தியமாயிற்று என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாம் எவ்வளவு பக்தியுடனிருக்கிறோம் என்பது நமக்கு தெரியாது. பாபாவுக்கு மட்டுமே தெரியும். இதை விளக்கும் வகையில் கீழ்க்கண்ட கதை அமைந்துள்ளது.

## காகா சாஹேப்பின் சந்தேகம் ஆனந்தராவின் கனவு

ஸ்ரீ சாயி பாபா மஹா சமாதிக்கு பின் ஒருநாள் பாம்பேயில் காகா சாஹேப் வீட்டில் 'ஏக்நாத் பாபா' பாராயணம் நடந்தது. பக்த ஷாமா காகா சாஹேப்புடன் உட்கார்ந்து புராணத்தை கேட்டுக் கொண்டிருந்தார். இந்த புராணம் ஒன்பது வித பக்தர்கள் பற்றிய விவரம். இதைக் கேட்டதும் சாஹேப்பின் உற்சாகம் குறைந்தது.

இதன்படி பக்தி தனக்கு இல்லையே என்று வருத்தப்பட்டார். இதை கண்ட ஷாமா ஏன் கவலைப்படுகிறாய் என்றார். குருபாத சேவையை விட சிறந்த பக்தி வேறொன்றுமில்லை என்று சொல்லவில்லையா! இருந்தாலும் சாஹேப்பின் வருத்தம் போகவில்லை. இவ்வாறே அந்த நாள் போனது. அடுத்த நாள் பாகவதம் ஆரம்பிக்கும் போது ஆனந்தராவ் பாக்காடே பட்டு வேஷ்டியை கையில் எடுத்துண்டு ஆரம்பித்தார். நான் ஆழ்கடலில் இருந்தேன். என் பக்கத்தில் இரத்தின சிம்மாசனத்தில் பாபாவும், அருகே ஷாமாவும் தென்பட்டனர். ''ஏன் கஷ்டப்படுகிறாய். பாபாவின் பாதங்களை நமஸ்கரி'' என்று சொன்னார். பாபாவின் பாதம் நீரில் இருப்பதால் எப்படி நமஸ்கரிப்பது என்று கேட்டேன். உங்கள் காலை வெளியில் எடுங்கள் என்று ஷாமா சொன்னதும் வெளியில் எடுத்தார். என் தலையை அவர் பாதத்தில் வைத்து நமஸ்கரித்தேன். ''உனக்கு ஒரு கஷ்டமுமில்லை. பயப்படாதே நாளை ஷாமாவுக்கு ஒரு பட்டு வேட்டி கொடு, நன்மை நடக்கும்'' என்று பாபா சொன்னார். இதைக் கேட்டதும் ஷாமா காகா சாஹேப்பிடம்'' நம் பக்தி எத்தகையது என்று பார்த்தாயா. பாபாவின் சகாயம் நமக்கு எவ்வளவு அவசியம் என்பது அவருக்கு தெரியும். நடுக்கடலில் இருந்தாலும் கூட கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருபவர் பாபா. இதனால் நம்முடைய பக்தி எத்தகையது என்று சந்தேகிக்க வேண்டாம். பக்தி, சிரத்தையுடன் இருப்பது நம் கடமை. சர்வாந்தர்யாமியான பாபாவுக்கே அனைத்தும் தெரியும். பக்தராக இருப்பதே நம் கடமை. அனைத்து பலனையும் பாபாவின் தயவே என்று நினைத்தார். ஆகவே நீங்களும் சந்தேகத்தை விட்டுவிட்டு சிரத்தையுடன் பாபாவை வழிபடுங்கள்'' என்று கூறினார்.

## பீமாஜி பாட்டேல்

பூனா ஜில்லாவில், ஜுன்னர் தாலுக்காவில் நாராயண கிராமவாசியான, பீமாஜி பாட்டேல் என்பவர்க்கு 1909 வருடத்தில் நெஞ்சுவலியில் அவஸ்தைப்பட்டு, பின்னர் க்ஷய ரோகத்தால் அவஸ்தைப்பட்டார். ஓரொரு 5 நிமிடத்திற்கும் ரத்த வாந்தி எடுத்தார். எத்தனை மாத்திரை சாப்பிட்டாலும் குணமேது மில்லை. உயிர்மேல் ஆசையை விட்டு விட்டு மரணத்தை எதிர்நோக்கினார். எஞ்சியுள்ள நாட்களை பகவானை தியானிப்பதில் செலவழித்தார். அப்படியிருக்கும் போது நாணா சாஹேப் சந்தோர்கர் என்ற சாயி பக்தர் வந்தார். நாணா தைரியம் சொல்லி ஷீர்டியில் சர்வசக்தியான பாபா இருக்கிறார். அங்கு சென்று அவர் அனுக்கிரஹத்தை பெற்றால் காசநோய் மட்டுமின்றி அனைத்து கொடிய வியாதிகளும் விலகிடும். முதலில் இதை செய் என்று சொன்னார். உடனே பீமாஜி நாணாவுடன் ஷீர்டி சென்றார். பாபாவின் பாதங்களைப் பற்றி தன்னை

காப்பாற்றும்படி சொன்னார். 'ஏய் சாயிநாதா' உன்னைத் தவிர எனக்கு வேறு திக்கில்லை. உன் அற்புதங்களை கேட்டு இங்கு வந்திருக்கிறேன். என் நோயை குணப்படுத்தி இல்லற வாழ்க்கைக்கு அனுப்புவதும், இங்கேயே இடுகாட்டுக்கு அனுப்புவதும் உன் விருப்பம்'' என்றார். அவர் நிலையைக் கண்டு பாபா மனம் உருகினார். ''கவலைப்படாதே, எல்லா பிரச்சனையும் முடிந்துவிடும் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் கூட மசூதிப்படியை மிதிச்சவுடன் எல்லா கஷ்டமும் விலகி ஒரு முடிவுக்கு வருவார்கள். பக்கிரி ரொம்ப தயா குணமுடையவர். உன் நோய் தீர்ந்துவிடும்'' என்று உறுதியளித்து ஆசீர்வாதம் செய்தார். பாபாவைப் பார்ப்பதற்கு முன் 5 நிமிடத்திற்கு ஒரு முறை வாந்தி எடுத்தவர் பாபாவை பார்த்த பிறகு ஒருமுறை கூட வாந்தி எடுக்கலை, பீமாபாய் என்ற வீட்டில் தங்கச் சொன்னார். ஒரு நாள் இரவு பீமாஜிக்கு ஒரு கனவு வந்தது. அந்தக் கனவில் ஒரு மாணவன் பாடம் படிக்கலை என்று வாத்தியார் கண்டிக்கிறார். இந்த கனவு வந்த பிறகு வியாதி கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியது. அதன் பின் இன்னொரு கனவு வந்தது. அதில் பாபா ஒரு பெரிய பாறாங்கல்லை எடுத்து பீமாஜியின் நெஞ்சில் இப்படியும் அப்படியும் உருட்டினார். மிகுந்த வலி ஏற்பட்டது. தாங்க முடியாமல் அலறிக் கொண்டே தூக்கத்திலிருந்து விழித்துப் பார்த்தால் எவரு மில்லை. அடுத்த நாளிலிருந்து அதி விரைவில் நோய் குறைந்தது. பின் வியாதி முற்றிலும் குணமாய் வீட்டிற்கு திரும்பினார். அவ்வப் போது ஷீரடிக்கு சென்று பாபாவை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார். பின் பூர்ணாயுசுடன் இருந்தார்.

பாபா தன் மரணத்தை தள்ளி வைத்தார் என்று பீமாஜி ஒரு காரியம் செய்தார். தாஸ்கனு மஹாராஜ் ஏற்படுத்தி தந்த முறைப்படி மாதம் ஒரு முறை ஷீரடி சாயி சத்ய விரத பூஜை செய்து சாயி பாபாவின் லீலைகளை ஐந்து கதைகளாக படிக்கும் படி செய்தார்.

தன் அவதார நாட்களிலேயே ஏற்படுத்தப்பட்ட இந்த விரத பூஜையை பாபா துவாரக மாயிலிருந்து ஆசிர்வதித்தார் - இப்போதும் ஆசிர்வதிக்கிறார் எப்போதும் ஆசிர்வதித்து கொண்டே இருப்பார் இது பக்தர்களான நம் பாக்கியம்.

**ஸமர்த்த சத்குரு ஸ்ரீ ஸாயி தந்த மஹாராஜ் கீஜே**
**தேங்காய் உடைத்து ரவாலட்டு நிவேதனம் செய்யும்**
**கேசரி மகா நைவேத்தியம் செய்யவும்**



# கற்பூர ஆரத்தி

ராஜாதி ராஜாய பிரசக்ய ஸாஹினே
நமோவயம் வைஸ்ரவணாய குர்மஹே
ஸமே காமான் காம காமாய மஹ்யம்
காமாஸ்வரோ வைஸ்ரவணோததாது
குபேராய வைஸ்ரவணாய மஹாராஜாய நம:

# (முடிந்த உடன்) மங்கள ஆரத்தி

ஸ்வாமி சாயிநாதாய திவ்ய மங்களம்
மா மஹா பீஷ்டதாய மஹித மங்களம்
லோகநாதாய பக்தலோக சம்ரக்ஷகாய
நாகலோக ஸ்துத்யாய நவ்ய மங்களம்
பக்த பிருந்தவந்திதாய ப்ருமஸ்வரூபாய
முக்தி மார்க்க போததாய பூஜ்ய மங்களம்
ஸத்ய தத்வ போதகாய ஸாதுவேஷாயதே
நித்ய மங்கள தாயகாய நித்ய மங்களம்

விரதம் முடிந்தது